1970 மார்ச் 3]

திரு. என். எஸ். வி. சித்தன் : மக்கள் தொகை உயர்ந்து வரும் இந்த நேரத்தில் இப்படி இடங்களைக் குறைப்பதால் படிப்பதற்கு வசதி குறைவாகும் நிலை உண்டாகிறது. ஆகவே, இருக்கின்ற வசதியைக் குறைக்காமல் பழைய நிலைக்கு உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மக்கள் தொகைக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. மக்கள் தொகை உயர்ந்து வந்தாலும் கூட தேவைக்கேற்றபடி உற்பத்தி செய்யவேண்டும். குறிப்பிட்ட திருமங்கலம் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிக்கு நான்கு வகுப்புக்கள் தரப்பட்டிருந்தன. அங்கு ஒழுங்கீனங்கள் ஏற்பட்ட காரணத்தால் இரண்டு வகுப்புகளாகக் குறைக்கப்பட்டன. மறுபடியும் ஒரு வகுப்பு தரப்பட்டு அதற்கும் பிறகும் மாணவியர்களைச் சேர்ப்பதில் ஒழுங்கீனங்களும் பணம் வாங்கும் குற்றச்சாட்டுகளும் வந்ததால், கொடுத்த அனுமதி நீக்கப்பட்டு இரண்டு வகுப்புகளாக ஆக்கப் பட்டன. நமது மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மேலும் கூட்டுகின்ற நிலைமை இல்லை. இப்போது இருக்கின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளே போதும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, புதிதாக எந்தப் பயிற்சிப் பள்ளியையும் உருவாக்குகின்ற நிலையில் தமிழக அரசு இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒழுங்கீனங்கள் காரணமாக இந்தக் குறிப்பட்ட பள்ளியின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது என்றார்கள். நான் புதிதாக அதிகப்படுத்தச் சொல்லவில்லை. ஏற்கனவே இருந்ததைத் தொடரச் சொல்லுகிறேன். குறிப்பிட்ட பள்ளியில் ஒழுங்கீனங்கள் இருக்கு மானால் வேறு பள்ளியில் 40 பிள்ளைகளைக் கொண்ட வகுப்பு தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான்கு வகுப்புகள் என்று இருந்ததில் இரண்டு ஜூனியர் வகுப்புகள் எடுக்கப்பட்டு விட்டன. மாநிலத்தில் இப்போதிருக்கும் சூழ்நிலையின் அடிப் படையில் இந்த வகுப்பையும் கூட்டுவதாக இல்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியையும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

*** 173 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தாராபுரத்தில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : ஏற்கனவே எங்கள் தாரா புரத்தில் பெண்களுக்கான ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருந்தது. அது இப்போது வேறு ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டது.

ஆகவே புதிதாக அங்கு வேறு ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தாவிட்டாலும் கூட, வேறு ஓர் இடத்திலுள்ள பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை எங்கள் ஊருக்கு மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான காரண காரியங்கள் இருக்குமானல் முறைப்படி விண்ணப்பித்து அது ஆராயப்பட்ட பிறகுதான் செய்யவேண்டும். தாராபுரத்தில் இருந்ததை வேறு ஓர் இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள் என்றால் ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில்தான் மாற்றியிருக்க வேண்டும். அது சரியா இல்லையா என்பதுபற்றி விண்ணப்பித்துக் கொள்வதன்மூலம்தான் அதைப் பரிசீலிக்கவேண்டும்.

*174 வின.—திரு. கே. போஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறக்கக் கோரி, அம்மாவட்டத்தின் அபிவிருத்தி மன்றத்தி லிருந்து மனு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், உடனடியாக இப்பள்ளியை நிறுவ அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. போஜன் : தற்சமயம் நீலகிரி மாவட்டத்தில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றுமே இல்லை. எங்கள் மாவட்டத்தில் அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் தனியார் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும், கோவையில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் இருக்கின்றன. அதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு, அதாவது மாணவிகளுக்கு அங்கு போதிய இடம் கிடைப்பதில்லை. ஆகவே, நீலகிரியில் உள்ள ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் உள்ள இடத்தைக் குறைத்தாவது பெண்களுக்கு ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊட்டியில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று தனியார் துறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அது நீலகிரி மாவட்டத்திற்குப் போது மானதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் எடுத்துக்கூறியுள்ளபடி ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறவர் களின் எண்ணிக்கை கூட, வருடாவருடம் எடுத்துக் கொள்கிற எண்ணிக்கை, குறைந்துவருவதால், அதிகமான ஆசிரியர், ஆசிரி யைகளை உற்பத்தியாக்கும் நிலைமையில் இப்போது இல்லை. 1965-66ல் 12,500, 1966-67ல், 10,410, 1967-68ல் 6,750 பேர்கள்தான் தேவைப் பட்டார்கள். ஆகவே, இனிமேல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக்